நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர்

திரு.M. ஸ்ரீதர், BE., M.Plan.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விழுப்புரம் மாவட்டம்,
56/ஏ, தாட்கோ வளாகம்
அரசு மருத்துவமனை சாலை,
விழுப்புரம்.

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

ந.க.எண்.2000/2021/ விமா2/நாள் 13.12.2021

அய்யா,

பொருள்: அனுமதியற்ற மனை வரன்முறைப்படுத்துதல் - மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் விழுப்புரம் மாவட்டம் – விற்பனை (Sold) செய்யப்பட்ட மனையை வரன்முறைப்படுத்த மனைப்பிரிவு கட்டமைப்பு வரைபடங்கள் (Sold Plot Framework Sketches) அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017
2) அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13193/2017/எல்ஏ1, நாள் : 27.03.2018.
4) அரசாணை எண்.21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 05.02.2019

-------

அரசு தலைமை செயலாளர் அவர்கள் தலைமையில் 05.02.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்பதிவுகள் மற்றும் பார்வை (3)ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தனி மனையினை வரன்முறைப்படுத்தும் திட்டத்தில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகள் எடுக்கப்பட வேண்டிய அறிவிப்பு குறித்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தங்களது நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் உள்ள எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளுக்கு கட்டமைப்பு வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

| வ. எண். | மனைப்பிரிவின் பெயர் | சர்வே எண். | கிராமத்தின் பெயர் | SPF NO. |
|---|---|---|---|---|
| 1) | ஸ்ரீ விசாலாட்சி நகர் | 181/2, 181/3, 181/4A | ராதாபுரம் | 09/2021 |

நிபந்தனைகள் :

1) 20.10.2016–க்கு முன் விற்கப்பட்ட மனைகளுக்கு மட்டும், மனைப்பிரிவு இடத்தினை நேராய்வு செய்து, உரிய அணுகு சாலை, உள்சாலைகள் (Internal Roads) வசதிகள் மற்றும் சுற்றியுள்ள நில உபயோகங்களை கண்டறிந்து உரிய தீர்மானம் இயற்றி சாலைகளை உள்ளாட்சி எடுத்துக்கொண்டு, அதன் பிறகு விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறை செய்ய வேண்டும். விற்கப்படாத மனைகளுக்கு நகர் ஊரமைப்பு துறையின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெற்ற பின்னரே வரன்முறை அனுமதி அளிக்க வேண்டும்.
2) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

3) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உள்ளாட்சியால் சரிபார்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

4) அரசாணை எண்.78, வீட்டு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு வரன் முறைப்படுத்துதல் விதி எண்.4 மற்றும் 6-ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் பாதிக்கும் வண்ணம இருப்பின் அந்த மனைகளை வரன்முறை செய்தல் கூடாது.

5) மனுதாரர் விண்ணப்பித்து இருக்கும் மனைகு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் உரிமை பெற்று இருக்க வேண்டும். ஒப்பந்த பத்திரம், பொது அதிகார ஆவணம் மூலம் உரிமைப் பெற்றிருப்பின் அது செல்லத்தக்கது அல்ல

6) கடற்கரை எல்லையிலிருந்து 500மீ தொலைதூரத்திற்குள் அமையும் மனைப்பிரிவு/தனிமனைகளை வரன்முறைப்படுத்துதல் கூடாது

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரங்கள் :

1) பரிசீலனைக் கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் www.tnlayoutreg.in இணையதளம் வாயிலாகவோ அல்லது The Assistant Director of Town and Country Planning, Villupuram Region அவர்களின் Corporation Bank Villupuram Branch **Account No. 510101006863315** – ல் மனை உரிமையாளரால் செலுத்தப்பட்ட விவரம் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்

2) பார்வை (4) காணும் அரசாணையின்படி வரன்முறைப்படுத்துதல் கட்டணம் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில் கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| **Head of Account:**<br>0217 Urban Development – 60 Other Urban Development Schemes 800 Other Receipts- AT Receipts Under Regularisation Charges of Unapproved layouts and plots – DTCP 27 Non Taxation fees – 30 Regularisation.<br>DPC: 0217-60-800-AT – 22730 | கருவூலத்தின் இணையதளம் WWW.Karuvoolam.tn.gov.in மூலம் Online வாயிலாக வரன்முறைப் படுத்தும் கட்டணம் செலுத்த வேண்டும். |

2) வளர்ச்சிக் கட்டணம் மேற்கண்ட மனைப்பரப்பிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25– வீதம் ஊராட்சியின் தனிக்கணக்கில் பெறப்பட வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு வரன்முறை செய்து அனுமதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்படி கட்டணங்கள் பெறப்பட்ட விபரமும், வரன்முறைபடுத்தும் ஆணையின் நகலும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது..

இணைப்பு :
மனைப்பிரிவு கட்டமைப்பு வரைபடம்.

13/12/2021

for நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மாவட்டம்,
விழுப்புரம்.

13/12/2021 13.12.2021

நகல்
திரு. விஸ்வநாதன்,
எண்.2/118, கருமாரப்பேட்டை,
இராதாபுரம் கிராமம்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

32

**விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.ஜெ.குலோத்துங்கன்.,**

ந.க.ஆ2/1910/2021 நாள்:23-12.2021.

பொருள் : அனுமதியற்ற மனை வரன்முறைப்படுத்துதல் – விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் – இராதாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீ விசாலாட்சி நகர் மனைபிரிவில் – மனை எண்கள் 4 முதல் 18 வரை 20 முதல் 23 வரை 25 முதல் 42 வரை 46 முதல் 63 வரை வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல்

பார்வை : 1.விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:2000/21/விமா2,நாள்:13.12.2021.

2.அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD(3)) துறை, நாள்:04.05.2017.

3.அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD(3)) துறை, நாள்:13.10.2017.

4.தொடர்புடைய ஆவணங்கள்.

**உத்தரவு:**

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், இராதாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீ விசாலாட்சி நகர் மனைபிரிவில் – மனைபிரிவில் – மனை எண்கள் 4 முதல் 18 வரை 20 முதல் 23 வரை 25 முதல் 42 வரை 46 முதல் 63 வரை பார்வையில் காணும் அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் பெறப்பட்ட பின் மனைகளை வரன்முறைப்படுத்தலாம் என பார்வை 1–ல் காணும் விழுப்புரம் நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

**அனுமதியற்ற ஸ்ரீ விசாலாட்சி நகர் மனைப்பிரிவில் அமையப்பெற்ற மனைபிரிவில் – மனை எண்கள் 4 முதல் 18 வரை 20 முதல் 23 வரை 25 முதல் 42 வரை 46 முதல் 63 வரை எனும் மனைகளுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட விபரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு | | ஸ்ரீ விசாலாட்சி நகர் |
| மனை எண் | | 4 முதல் 18 வரை 20 முதல் 23 வரை 25 முதல் 42 வரை 46 முதல் 63 வரை |
| மனையின் பரப்பளவு | | 8039.00 ச.மீ. |
| வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 ச.மீ–க்கு 45 எனில் (8039×45 = 361755) | | ரூ.361755/– |
| வளர்ச்சி கட்டணம் 1 ச.மீ–க்கு 25 எனில் (8039×25 = 200975) | | ரூ.200975/– |
| பரிசீலனை கட்டணம் 55x500=27500) | | ரூ.27500/– |

மேற்காணும் கட்டணங்கள் மனை உரிமையாளரால் சம்மந்தப்பட்ட கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் வி.சாத்தனூர் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீ விசாலாட்சி நகர் மனைபிரிவில் மனை எண்கள் 4 முதல் 18 வரை 20 முதல் 23 வரை 25 முதல் 42 வரை 46 முதல் 63 வரை எனும் மனைகளை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

23/12/21

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம் விக்கிரவாண்டி

பெறுதல்:
திரு.விஸ்வநாதன்.
2/118,கருமாரப்பேட்டை,
இராதாபுரம்.

23/12/21

நகல்:
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்.